**IN THE COURT OF SUBORDINATE JUDGE, MANAMADURAI,**
**PRESENT: TMT. R. GEETHA, B.A., B.L.,**
**SUBORDINATE JUDGE,MANAMADURAI,**
**Monday this is the 30th day October 2023**
**IA.No.1/2023**
**O.S.19/2023**
**- - - - -**

Srilasri Arumugaswamigal Madam,
Through its Director R. Loganathan ...Petitioner/Plaintiff

..Vs..

S. Nagarajan ...Respondent/Planitiff

This Petition is coming before me on 27.09.2023 for final hearing in the presence of Thiru.S.Partha Sarathi, B.Sc.,B.L., Advocate for Petitioner/Plaintiff and Thiru.T.Muthuramalingam, M.A.,B.L., Advocate for Respondent/Plantiff upon hearing enquiry of both side and perusing records, having stood over till this day for consideration of this court and delivered the following:

**<u>ORDER</u>**

This Petition has been filed by the Petitioner/Plaintiff Under Order 8, Rule 9 of Sec.151 of CPC.

**2) Sum and Substance of Petition Affidavit filed by the Petitioner/Plaintiff:**

எதிர்மனுதார்/ பிரதிவாதி மீது சுவாதீன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையைப் படித்துப் பார்த்தேன் என்றும் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை நிகழ்வுகளுக்கு எதிராகவும், பொய்யும் புரட்டுமாகவும் சொல்லப்பட்டுள்ளது என்றும் அவைகளை மறுத்து மனுதார் பதில்

வழக்குரைத் தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதை சமூகம் நீதிமன்றம் பெற்றுக் கொள்ள உத்திரவிட வேண்டியது அவசியமானது என்றும் இல்லாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படக் கூடியதாய் இருக்கிறது மாறாக எதிர்மனுதார்களுக்கு எவ்வித் பாதிப்பும் ஏற்படாது என்றும் ஆகையால் இத்துடன் தாக்கல் பதில் வழக்குரையை ஏற்றுக் கொண்டு தகுந்த உத்தரவிட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**3) Sum and substance Counter Affidavit filed by the Respondent /Defendant:**

எதிர்மனுதாரர் தரப்பு எதிர்வழக்குரையில் குத்தகை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டதற்கான குத்தகைத் தொகையை வங்கி பரிவர்த்தனை மூலம் வாதி மடத்தில் நிர்வாகியான முருகானந்த சுவாமிகள் பெற்றுக்கொண்டு அதற்கு ஒப்புதலும் வழங்கியுள்ளார் என்றும் அதற்கான ஆதாரங்களும் மடத்து ஆவணங்களில் பதிவு ஏற்பட்டுள்ளது என்றும் அதனை மறைத்து அந்த விஷயங்கள் ஏதோ எதிர்மனுதாரருக்கு தெரியாது என்பது போல கூடுதல் பதில் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் யாவும் பொய்யாகும் என்றும் வாதி மடத்தை நிர்வகிக்கும் பொறுப்பு முருகானந்த சுவாமிக்கு இல்லை என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் வழக்குரையுடன் வாதி தாக்கல் செய்யவில்லை என்றும் அவ்வாறுள்ள நிலையில், தற்போது கூடுதல் பதில் வழக்குரையில் நிர்வாகம் செய்யும் பொறுப்பு முருகானந்தசுவாமிகளிடம் இல்லை என்று பொய்யாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் முருகானந்தசுவாமிகளுக்கு அடிப்படை தகுதியும், கடமையும் இருந்துள்ளது என்றும் அதை இல்லை என்று மறுக்க இவ்வழக்கின் வாதிக்கு எவ்வித உரிமையும் சட்டப்படி இல்லை என்றும் குத்தகை ஆவணத்தை நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எதிர்மனுதார் தயாராக உள்ளேன் என்றும்

மேற்படி குத்தகை ஆவணத்தைப் பொறுத்து இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 03.08.2021ம் தேதி மேற்படி வாதி அவரது வழக்கறிஞர் மூலமாக எதிர்மனுதாருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பிற்கு எதிர்மனுதார் வழக்கறிஞர் மூலம் 14.08.2021ம் தேதி பதில் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளதிலும், எதிர்மனுதார் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதிலும் எல்லா விபரங்களையும் தெளிவாக தெரிவித்துள்ளேன் என்றும் அவ்வாறுள்ள நிலையில், Material விஷயங்கள் எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்று பொய்யாக தாவா மனுவில் வாதி குறிப்பிட்டுள்ளார் என்றும் ஆக எந்த வகையில் நோக்கினாலும், தாவா கூடுத்ல் பதில்வழக்குரையை அனுமதிக்கக் கோரும் தாவா மனுவும் சட்டப்படி நிலைநிற்கத்தக்கதில்லை என்றும் வழக்கை தாக்கல் செய்துவிட்டு, அதனை மேல்நடத்தி விசாரணை செய்ய முன் வராமல் காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்தோடு வாதியால் கூடுதல் பதில் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே கூடுதல் பதில் வழக்குரையை ஏற்றுக்கொள்ள அனுமதிகோரும் தாவா மனுவை அனுமதிக்க சட்டப்படி தகுந்த முகாந்திரமும் இல்லை என்றும் ஆகவே தாவா மனுவையும் எதிர்மனுதாரர் தரப்பு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**4) Heard Both side. No documents marked on both side.**

**5. Points for Consideration:**

1. Whether the Petitioner/Plaintiff is permitted to file the Reply Statement?
2. Whether the Petition is allowed or not ?

**6.** On perusal of records it is found that the original suit has been filed by the Petitioner/Plaintiff against the Respondent/Defendant for relief of recoverty of

possession and for mesne profit and in the suit the Respondent/Defendatn entered into appearance and defend the suit by filing written statement and now the suit is at the stage of reporting possibilities of the settlement or issues. At this juncture the Petitioner /Plaintiff come forward with this application to receive reply statement to the written statement of the Respondent/Defendant.

**7.** Now the question is arose to the Court is that whether the Petitioner/Plaintiff permitted to filed the reply statement and thesame will be received by this court. As per ORder 8 Rule 9 of CPC no pleading subsequent to written statement of defendant orther than set off or counter claim shall be presented except by leave of the court. In present petition the Petitioner/Plaintiff seeking leave of this court to receive his reply statement to the written statement of Respondent/Defendant. So there is no bar on person to seek leave of this court to file the subsequent pleading. On perusal of recrods it is found that Respondent/Defendant filed the written statement on 03.06.2023 and the Petititoner/Plaitniff filed this petition to receive the reply statement on next hearing i.e on 14.07.2023. So it is clear that there is no inordinate delay or laches in filing the petition.

**8.** From above consideration this Court comes to the conclusion that the leave is granted to the petitioner/plaintiff to file his reply statement and also comes to the conclusion that the reply statement filed by the Petitioner/Plaintiff will be receive and to form part of record.

Accordingly this Petition is Allowed. No Costs .

Directly dictated to the typist, typed by her, corrected and pronounced by me in the Open Court, this is the 30th day of October 2023.

**Subordinate Judge,**
**Manamadurai.**

Petitioner/Plaintiff side Witnesses and Documents: Nil
Respondent/Defendant side Witnesses and Documents: Nil

**Subordinate Judge,**
**Manamadurai.**